பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 23 சித்திரை 5 ஜ. ஆகிர் 11 இதழ் 66

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17 - 4 - 1981

## இலங்கைஅரசுக்கு

### சவூதி இளவரசர் பாராட்டு

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்த சவூதி அரேபிய இளவரசரும் வெளிநாட்ட அமைச்சருமான மாட்சிமை தங்கிய சவுதி - அல் - பைசால் நேற்று மாலை வெளிநாட்ட மைச்சர் ஜனாப். ஏ. சீ. எஸ். ஹமீட்டைச் சந்தித்து சர்வ தேசப்பிரச்னைகள்தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இலங்கை அரசின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாராட்டிய இளவரசர் அணி சேரா இயக்கத்தில் இலங்கை வகிக்கும் பங்கிற்கும் பாராட்டுத்தெரிவித்தார்.

இளவரசர் இன்று ஜனாதிபதியையும் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமதுவையும் சந்திப்பார்.

★ அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் சூடுபிடிக்கிறது

# யாழ். மாவட்டத்தில்

# ஆறு அணிகள் மோதும்!

## இன்று கதிரவேலுப்பிள்ளை அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற கோப்பாய் எம்.பி. கதிரவேலுப்பிள்ளையின் அஞ்சலிக்கூட்டம் இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அறவழிப் போராட்டக்குழு உறுப்பினர் திரு. வி. சுதுரைராசா தலைமையில் நடைபெறுகிறது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட தமிழர் கூட்டணி எம்.பிக்களும் பிரமுகர்களும் உரை நிகழ்த்துவார்கள் (சி)

## கூட்டணிப் பட்டியல் நாளை வெளியிடப்படலாம்

(யாழ்ப்பாணம்)

'குட்டிப் பாராளுமன்றம்' என்று வர்ணிக்கப்படும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் அரசியல் கட்சிகள் தற்போது மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கான தேர்தலில் நான்கு அரசியல் கட்சிகளுடன் இரண்டு சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் ஆறு அணிகள் போட்டியிடவுள்ளதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ், ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகளுடன் சிறுபான்மை முன்னணியும் திரு. செ. குமாரசூரியர் தலைமையிலான சோஷலிச முன்னணியும் சுயேட்சைக் குழுக்களாகவும் போட்டியிடவுள்ளன. சிறுபான்மைத் தமிழர் முன்னணி போட்டியிடுவதுபற்றி உறுதிப்படுத்தப்படவில்லையானாலும் அது பெரும்பாலும் முடிவாகி விட்டதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்கள் விபரம் அநேகமாக நாளை வெளியிடப்படலாம். யாழ். மாவட்டத்துக்கான வேட்பாளர்களாக விண்ணப்பித்தவர்களை கூட்டணியின் நியமனக்குழு நாளை சந்திக்கவிருக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியல் இம் மாதம் 20ம் திகதி வெளியிடப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பட்டியல்களைச் சகல அணிகளும் சில தினங்களில் வெளியிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சகல அணிகளுமே இம்மாதம் 24-ம் திகதிக்கு முன்னர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யவுள்ளன. (கு)

## தெல்லி. துர்க்கா தேவிஆலய மகாகும்பாபிஷேகம் இன்று

(மாவிட்டபுரம்)

அருள்மிகு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கடந்த புதன்கிழமை காலை மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இருந்து இடம்பெற்ற குருமார் அழைப்புடன் ஆரம்பமான கும்பாபிஷேகக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்றன.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் 15 குருமார்கள் இக்கிரியைகளை நடாத்தினார்கள்.

இக்கும்பாபிஷேக விழாவில் தேவ அத்தியயனம் செய்ய தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ஸ்ரீ. ஆர் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள், ஸ்ரீ. வே. நாகசுவாமி சர்மா ஆகியோர் வேத அத்தியயனம் செய்தார்கள்.

திருமுறை இசையரசு திருப்பனந்தாள் முத்துக்கந்தசாமி தேசிகர் திருமுறை பாராயணம் செய்தார்.

விசேடமாக அமைக்கப்பட்டுள்ள யாக குண்டங்களில் ஓமம் வளர்க்கப்பட்டு மற்றும் கிரியைகளும் நடைபெற்றன. (இ)

கூட்டணி பட்டியல்

## சட்டத்தரணி நாகராசா 2ம் இடம்பெறுவார்!

### சிறுபான்மைத் தமிழருக்கு 3ம் இடம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ். மாவட்ட பட்டியலில் முதலாம் இடம் முன்னாள் செனட்டரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். நடராசாவிற்கு என்பது உறுதியாகிவிட்டது.

இரண்டாம் இடம் முன்னாள் யாழ். மேயரும் சட்டத்தரணியுமான திரு. கி. நாகராசாவுக்கு கிடைக்கும் என்பது நிச்சயமாகிவிட்டது. திரு. நாகராசாவின் சம்மதமும் இதற்கு கிடைத்து விட்டதாம்.

மூன்றாவது இடம் சிறுபான்மை தமிழர் சமூகத்தை சேர்ந்தவருக்கு வழங்கப்பட விரும்பதாக தெரியவருகிறது.

மற்றும் இடங்கள் உடுப்பிட்டி தொகுதியைச் சேர்ந்த திரு முத்துக்குமாரசாமி, திரு. பாஸ்கரன் கோப்பாய் தொகுதியை சேர்ந்த திரு சின்னத்துரை, ஊர்காவற்றுறை தொகுதியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் உதவி அரசாங்க அதிபரான திரு. தம்பிமுத்து கிளிநொச்சியைச்சேர்ந்த திரு. கிருஷ்ணராசா ஆகியோரின் பெயர்கள் முன்னணி வகிக்கின்றனவாம்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 50 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் மற்றும் மாவட்டங்களுக்கு பத்து விண்ணப்பங்கள் வீதம் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது

### கத்தோலிக்கருக்கும் இடமளிக்கப்படும்

இதேவேளை யாழ்பாணத் தொகுதியிலிருந்து கத்தோலிக்கர் ஒருவருக்கும் இடமளிக்கும் நோக்குடன் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசத்தையும் பட்டியலில் சேர்ப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளரான இவருக்கு இடமளிப்பதில் கூட்டணித்தலைமைப்பீடம் அவாலாக இருந்தாலும் திரு. ஞானபிரகாசம் மறுப்புத்தெரிவிப்பதாகவும் ஆனாலும் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## யு. என். பி. வேட்பாளர்கள் இன்னும் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட சபைத்தேர்தலுக்கான ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட பட்டியலின் முதல் பெயர் பற்றி இன்னும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது

முதல்பெயர் பற்றி முடிவு எடுத்தவுடன் பட்டியல் பூர்த்தியாகிவிடும் என்று கூறப்படுகிறது.

வேறு சிலரின் பெயர்கள் முதலாம் இடத்திற்கு பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும் திரு. கணேசலிங்கத்தின் பெயரே தற்பொழுது முக்கிய இடம் வகிக்கிறது. சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு பட்டியலில் முன்னணி இடம் வழங்கப்பட விருப்பதாக தெரிகிறது.

சட்டத்தரணி ஆர். ஆர். நல்லையா சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து வட

(8-ம பக்கம் பார்க்க)

ஹோம் பினான்ஸ் லிமிட்.,

82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக் கூடுதலான

25% வட்டியை

வழங்குகிறது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும். உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.

✶ உஷ்ண காலத்துக்கு உகந்த முதல்தரமான

USHA Ceiling Fan

(உஷா மின் விசிறி)

✶ உயர்தரமான

"AIWA" கசற் றேடியோ

தலைமையகம்:

463, காலி வீதி, கொழும்பு - 3. தொலைபேசி: 89190

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

10 சிறி மொறிஸ்மைனர் 1000. புது என்ஜின் பொருத்தப்பட்டு லண்டனிலிருந்து கொண்டுவரப்பட்ட கார் உடனடியாக விற்பனைக்குண்டு. இ. தம்பித்துரை, பொற்பதி ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. 8891

மிக நல்ல நிலைமையிலுள்ள EN இலக்கத்தொடர் வொக்ஸ் வகன் கார் உடனே விற்பனைக்குண்டு. இராசரத்தினம், நில அளவைக்காரியாலயம். பழையசச்சேரி அல்லது ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். 8876

22 சிறி 3 தொன் (Austin) டீசல் லொறி விற்பனைக்குண்டு. 25% முற்பணத்துடன் மீதி மாதாந்தத் தவணைப்பணமாக செலுத்தவும் ஒழுங்குசெய்லாம். விபரங்கட்கு: 80, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 8880

புதிய 'பிறிஸ்டேன்' டிராக்டர் டயர் ஒன்று (11x28) உள்ளது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 'ஜெயா' அச்சகம், அளவெட்டி வடக்கு. 8873

## பயிற்சி

றேடியோ- டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் ஆரம்பம். 25-4-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 8882

## தேவை

சிலிண்டர் மெசின் மைண்டர் உடன் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். திருக்கணித அச்சகம், மட்டுவில், சாவகச்சேரி. 8883

## வெற்றுச்சாக்கு விளம்பரம்

வலிகிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் (அச்சுவேலி) தரம் பிரிக்கப்பட்ட சுமார் ஐயாயிரம் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவிரும்புவோர் கேள்வி வைப்புப்பணமாக நூறும், மீளத்தகாத பணமாக ரூபா ஐந்தும் காரியாலயத்தில் 25-4-81ந் திகதிக்கு முன் கட்டி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை 1-5-81ம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என்வலப்பில் இடதுபக்கமூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வலிகிழக்கு
வடபகுதி பலநோக்குக்
கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி.
8884

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல்

மணிலா ஏப் 15.

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதிதேர்தல் ஜூன் மாதம் 16ம் திகதி நடைபெறுமென ஜனாதிபதி திரு. பேர்டினண்ட் மார்க்கோஸ் தெரிவித்துள்ளார். (வெ)

# ஆறுமுகநாவலருக்குபின்னர்

## சமயவளர்ச்சியில் முக்கியபங்கெடுத்தவர்

### பரமாச்சாரியசுவாமிகளுக்கு நல்லூர் 'சிவா' அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"ஆறுமுகநாவலருக்குப் பின்னர் இந்து சமய வளர்ச்சியில் முக்கியமான பங்கை எடுத்து வந்தவர் சுவாமிகள். இலங்கையில் முதன் முதலாக திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவி கதாப்பிரசங்கம், பண்ணிசைகளை மிகவும் பக்தி சிரத்தையுடன் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் நடாத்தி சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றினர்"

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஞானசம்பந்த தேசிகபரமாச்சாரியாரின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் சுவாமிகள் தமிழுக்கும், சைவத்துக்கும் ஆற்றிவந்த தொண்டுகள் இலங்கை தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாட்டு மக்களுக்கும் கிடைத்து வந்தது இவருடைய இழப்பு உலகத்திலுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும்" என்றார். [சி-கு]

## விபத்தில் கான்ஸ்டபிள் காயம்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணிச் சந்தியில் இடம்பெற்ற இராணுவ வண்டி-கார் விபத்தில்சங்கானை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். சிவபாதசுந்தரம் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## உடுவில் கிராமாட்சிமன்றம் கேள்வி விளம்பரம்

1981ம் ஆண்டு ஏப்றில் மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை மூற்பகல் 10-30 மணிவரை "மருதனார்மடம் பொதுச்சந்தைக் கட்டட வேலைக்"கான "சீல்" வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-உம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-உம் செலுத்துவதன்பேரில், விசேடஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படல்வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபன நிறுவனங்களில் ரூபா 75,000/-க்கு மேல் வேலை செய்ய பதியப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்பட்சத்திலேயே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1981ம் ஆண்டு ஏப்றில் மாதம் 28ந் திகதி பிற்பகல் 3-30 மணிவரை வழங்கப்படும். செவ்வாய் வியாழக்கிழமைகளில் மட்டும் காசு ஏற்றுக்கொள்ளப்படும். மற்றைய தினங்களில் காசோலை, காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் எதுவும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்:
ஏ. சி. செபநாயகம்
விசேடஆணையாளர்,
உடுவில் கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
உடுவில், சுன்னாகம்.
1981-04-15. 8886

## மூதாட்டி மரணம்

(கிளிநொச்சி)

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிபமாது ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார். இச்சம்பவம் விசுவமடுவில் இடம்பெற்றது.

கதிரிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை என்ற மூதாட்டியே இவ்வாறு மரணமானவராவார். இவரது மரணவிசாரணை திரு. எம். யோகலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. விசாரணை முடிவில் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (கொ)

## உதயசூரியனும் வீனஸூம் வென்றன

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலைய வி. கழகம் நடாத்தும் பரராசசிங்கம் ஞாபகார்த்த 3வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் தொடர்ந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறை உதயசூரியன் வி. கழகம், புத்தூர் எவறெஸ்ட் வி. கழகத்தை 2—1 கோல்களால் வெற்றிபெற்றது.

அடுத்து வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் புத்தூர் வீனஸ் வி. கழகம், அச்சுவேலி நவோதய வி. கழகத்தை 3—2 கோல்களால் வெற்றி பெற்றது. (ச-அ)

## விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களின் மெய்வல்லுனர் போட்டி வட்டக்கச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. (மண்- ...)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

### நவீனசந்தைக் கடைகள்

சாவகச்சேரி நவீனசந்தையில் மிகுதியாக இருக்கும் கீழே காட்டப்பட்டுள்ள கடைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28-4-1981ம் திகதி பிற்பகல் 12-30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்காக இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் படிவத்திலேயே கேள்விகள் அனுப்பப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள், மீளளிப்புச்செய்யப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50/ம், மீளளிப்புச்செய்யப்படும் கேள்விப் பிணைப்பணமும் 27-4-1981ந் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு முன் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

| கடைகளின் விபரம் | கேள்விப் பிணைப்பணம் | கடையின் தொகை | ஒரு கடையின் ஆகக்குறைந்த முற்பணம் |
|---|---|---|---|
| (அ) மேல்மாடி கண்டிவீதிப் பக்கம் | ரூ. 500/- | 05 | ரூபா 25,000.00 |
| (ஆ) தரைமாடி சந்தைப்பக்கம் | ரூ. 500/- | 01 | ரூபா 20 000,00 |

இதுபற்றிய மேல்விபரங்கள் இக்காரியாலயத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கே. திரவியநாயகம்
தலைவர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
14-4-1981. 8887

## அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தால் 7-4-81 அன்று நடைபெறவிருந்த "நாட்டிய மாலிகா" நடன நிகழ்ச்சிகள் பின்போடப்பட்டுள்ளன. தயவு செய்து ரிக்கற் பெற்றவர்கள் அதைத்திருப்பிக் கொடுத்து பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளவும்.

திருமதி சாந்தி கணேஷ், நிர்வாகி, 12, செபஸ்தியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம். 8881

## தேவை

பிரபல்யமான வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவம்வாய்ந்த லேத் மெசினில் வேலைசெய்யக்கூடியவர்களும், சைக்கில் பூட்டுவதில் அனுபவமுள்ளவர்களும் உடனடியாக தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்:

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 18-04-81 சனிக்கிழமை மு. ப. 9-00 மணி

இடம்: கல்லூரியின் அழகரட்ணம் மண்டபம்

பிரதம விருந்தினர்: கல்லூரி அதிபர்
திரு. வே. சுந்தரதாஸ்

தலைவர்: டாக்டர் மணிசி க. தம்பிராசா

பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து, சங்க வளர்ச்சிக்கும் கல்லூரியின் அபிவிருத்திக்கும் நல்லாலோசனைகளை வழங்குமாறு தாழ்மையுடன் அழைக்கிறோம்.


தங்கள் சேவைக்குரிய
அ. மு அருணாசலம்,
செயலாளர்.
8883


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்



- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED
மக்வூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ். கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

METROPOLITAN

# "ஆப்கான் பிரச்னைக்கு விரைவில் தீர்வு வேண்டும்"

## -- பிரதமர் இந்திரா



புதுடில்லி, ஏப். 16

"ஆப்கானிஸ்தான் பிரச்னை தொடர்பாக விரைவில் தீர்வு காணப்படவேண்டும். இதுஒரு நெருக்கடியான பிரச்னை. இப்பிரச்னைக்கு அரசியல் ரீதியாக தீர்வுகாணவேண்டும்" மேற்கண்டவாறு இந்தியாவிற்கு ஐந்துநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்தியப்பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் தெரிவித்ததாவது "பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பெருமளவில் ஆயுதங்களை வழங்கிவருவதனால ஏற்படும் விளைவுகளை இந்தியா உணர்ந்துள்ளது.

பாக்கிஸ்தானுடன்தொடர்ந்தும் நட்புறவைப் பேணி வளர்ப்பதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது.

செல்வந்த நாடுகளுக்கும் வளர்முகநாடுகளுக்குமிடையே பெரும்இடைவெளிஏற்பட்டுள்ளது. சர்வதேச பொருளாதார விருத்திக்காக உலகநாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும்.

"வல்லரசு நாடுகள் படைப்பலத்தை அதிகரிப்பதைக் குறைக்க வேண்டும். இனவேற்றுமை, ஆளுமையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். உலகநாடுகள் அமைதியை நிலைநாட்டுவதில் தோல்வி கண்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்" என்றார்.

இப்பேச்சுவார்த்தையின் போது பிரிட்டிஷ்பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர் கூறியதாவது; "அணிசேரா இயக்கத்தில் இந்தியா பெரும்பங்கினை வகித்துவருவதுடன் உலகில் அமைதியை நிலைநாட்டுவதிலும் முன்னிற்கிறது. உலக நாடுகள் சர்வதேசசட்டத்தை மதிக்காததால் உலகில் ஆபத்து நிலமையொன்று உருவாகியுள்ளது. நாடுகளுக்கிடையிலுள்ள பிரச்னைகளுக்கும், வேற்றுமைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும்" என்றார்.

ஈரான்-ஈராக் யுத்தம், மெக்சிக்கோவில் நடைபெறவுள்ள பொருளாதாரமகாநாடு, மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் இவர்கள் இருவரும் கலந்துரையாடினர்

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சருக்கு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று விருந்துபசாரமளித்து கௌரவித்தார். (வெ)

## இப்படியும் நடக்கிறது

பஸ் சேவை பற்றிப் பொதுவாகச் செய்தி வந்தால், அந்தச் செய்தியில், 'சீர்கேடு' எனும் வார்த்தை எப்படியும் இடம் பிடித்துக்கொள்ளும். இதேபோல, பஸ் சாரதிகள் —கண்டக்டர்கள் பற்றிச் செய்தி வந்தால், அந்தச் செய்தியில் 'புகார்' எனும் வார்த்தை எப்படியும் இடம் தேடிக் கொள்ளும்! இது ஒரு தீராத 'வியாதி'!

ஆனால், எத்தனையோ பல நல்ல விஷயங்களும் நடக்கத்தான் செய்கின்றன. அவை அதிகமாக வெளிவருவதில்லை. காரணம் —அக்கறையின்மையா? இருட்டடிப்பா?

யாழ்ப்பாணம் — பண்டத்தரிப்பு பஸ்ஸில், சுளைசுளையாக ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கண்டெடுக்கப்பட்டு, பிரயாணிகள் எவருமே கோரப்படாத நிலையில் யாழ். பஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது! அப்பாவி பஸ் பிரயாணி ஒருவரின் இப்பணத்தை ஒப்படைத்தவர்கள் பஸ் சாரதி வி. திருநாவுக்கரசு, பஸ் கண்டக்டர் ஆர். சிறிபவன் ஆகிய இருவருமாகும்.

பஸ் சேவை — பஸ் ஊழியர் பற்றி என்னவெல்லாமோ வெளிவரும் நேரத்தில், இப்படியும் சம்பவங்கள் நடக்கத்தான் செய்கிறது. அந்த இரண்டு ஊழியர்களுக்குமே ஒரு 'சபாஷ்' கொடுக்கலாமா?

ஊடுருவி.

"மத்திய கிழக்கில்

## அமைதியையும், பாதுகாப்பையும் சிரியா நிலைநாட்டவேண்டும்"

### — ஜனாதிபதி றீகன்

வாஷிங்டன், ஏப். 16

'மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கு சிரியா ஆற்றிவரும் பங்கினைப் பாராட்டுகின்றேன்,'

மேற்கண்டவாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் சிரியாவின் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில்தெரிவித்துள்ளார்.

அவர் அச்செய்தியில்மேலும் தெரிவித்துள்ளதாவது; 'சிரியா மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பாதுகாப்பையும், அமைதியையும் நிலைநாட்டுவதற்கு பெரும்பங்கினை வகிக்கமுடியும்.'

லெபனானிலுள்ள கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக சிரியா காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்துவருவதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் தமது மத்திய கிழக்கு விஜயத்தின்போது ஜெருசலமில் வைத்து சிரியாவைக் கண்டித்திருந்தார்.

அமெரிக்க வெளிநாட்டமைச்சரின் இக்கருத்திற்கு முரணாக அமெரிக்க ஜனாதிபதியின் கருத்து அமைந்திருக்கிறதென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (வெ)

## 'கொலம்பியா' விண்வெளிக்கப்பலில் பயிற்சியின்றி எவரும் செல்லலாம்!

### அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்

வாஷிங்டன், ஏப். 16

ஒரு விமானத்தைப்போன்று பலதடவைகள் விண்வெளிக்கு சென்று திரும்பக்கூடிய 'கொலம்பியா' என்ற விண்வெளிக் கப்பலில் பூமியை 36 தடவைகள் வலம்வந்த விண்வெளிவீரர்களான திரு. ஜோன் யங்கும், திரு. றொபேர்ட் கிறிப்பனும் தேகாரோக்கியத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

விண்வெளிக்கு விசேட பயிற்சியெதுவுமின்றி சாதாரண மக்கள்கூட சென்றுதிரும்புவதற்கு வழி வகுக்கும் நோக்கத்துடனேயே "கொலம்பியா" என்ற விண்வெளிக் கப்பல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (வெ)

மட்டு நகர் - யாழ். பஸ்ஸில்

## கஞ்சா கடத்தல்: ஆனையிறவில் ஒருவர் கைது

(பச்சிலைப்பள்ளி)

ஆனையிறவுத் தடைமுகாமில் பளைப் பொலிஸாரால் கஞ்சாக் கடத்தல் ஒன்று முறியடிக்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை, இரட்டைக் கொலை ஆகிய சம்பவங்களையடுத்து ஆனையிறவுத் தடைமுகாமில் வைத்து வாகனங்களைப் பலத்த சோதனையிட்டுவரும் பொலிஸார் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஒன்றைச் சோதனையிட்டபோது அங்கிருந்த சூட்கேஸ் ஒன்றிலிருந்து அறுபதினாயிரம் கிறெயின் கஞ்சா கடத்திவருவது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனையிறவுத் தடைமுகாமில் கடமையாற்றிய பளைப் பொலிஸைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஜி. ஆர். மூல்லேகம, வி சின்னத்தம்பி, எஸ். நாதன் ஆகியோரே இக்கஞ்சாக் கடத்தலைக் கண்டுபிடித்ததுடன், பஸ்ஸில் பிரயாணஞ்செய்த மட்டக்களப்பைச் சேர்ந்த கதிரவேலு கணபதிப்பிள்ளை என்ற பிரயாணியையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி முன் ஆஜர்செய்தனர்.

## அனல்காற்றுக்கு ஒருவர் பலி

சென்னை, ஏப். 16

சென்னையில் நேற்று வீசிய அனல் காற்றுக்கு ஒருவர் பலியானார். (வெ)

## யுரேனியம் படிவங்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஏப். 16

மத்தியப்பிரதேசம், கர்நாடகம், உத்தரபிரதேசம் ஆகிய பகுதிகளில் யுரேனியம் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (வெ)

### சுட்டுக் கொலை

டெல்அவிவ், ஏப். 6

லெபனானின் தென்பகுதி எல்லையில் காற்றடைக்கப்பட்ட பலூன்ஒன்றில்இறங்கிக் கொண்டிருந்த பலஸ்தீனக் கொரில்லாக்களை இஸ்ரேலிய துருப்புக்கள் சுட்டுக்கொன்றனர்!

பலூன் கீழே இறங்கியதும் பல கெரில்லாக்கள் இஸ்ரேலிய துருப்புக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் ஜோர்டானிலிருந்து இஸ்ரேலுக்குள் பிரவேசிக்க முற்பட்ட இரு கெரில்லாக்களை இஸ்ரேலியத் துருப்புக்கள் கைது செய்திருந்தது தெரிந்ததே. (வெ)

## இருகாலும் ஊனமுற்றவருக்கு மகளிர்மன்றம் உதவி

(யாழ்ப்பாணம்)

இரு கால்களும் ஊனமுற்ற பெண்மணி ஒருவருக்கு யாழ், இந்து மகளிர் மன்றத்தினர் கையினால் இயங்கக்கூடிய தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோவில்வீதியைச் சேர்ந்த ஜெயராணி இமானுவல் என்ற இப்பெண் ஒரு கால் மாத்திரம் ஊனமுற்றிருந்த நிலையில் யாழ்நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்துவந்தார்.

ஒருதினம் பஸ்ஸிலிருந்து இறங்குகையில் ஏற்பட்ட விபத்தில் மறுகாலையும் இழக்க நேர்ந்தது. இதனால் வேலைக்குச் சென்று வருவதும் முடியாமற் போய்விட்டது, பஸ் விபத்தில் நஷ்ட ஈடு கோரி இவர் இ. போ. ச. மேலிடத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளார் என்று தெரிகின்றது.

## இன்ஸ்பெக்டர் காயமடைந்தார்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு கே. வீரசேன தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததினால் காயமுற்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கருத்தரங்கு

(சுழிபுரம்)

சோஷலிஸ முன்னணிக் கருத்தரங்கு பண்ணாகத்தில் நாளை பிற்பகல் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் திரு. செல்லையா குமாரசூரியர் கருத்துரை வழங்குவார்.

## உயர்நீதிமன்ற மேலதிக நீதிபதிகள்

சென்னை, ஏப். 16

சென்னை உயர்நீதிமன்ற மேலதிக நீதிபதிகளாக திரு. என், நாராயணமூர்த்தி, ஜனாப் எம். அப்துல்லா பக்கீர்முகம்மது ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் இவர்களின்பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். (வெ)

## போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்தில் மாற்றம் வேண்டும்

### அங்கத்தவர்கள் வலியுறுத்து

வார்சோ, ஏப். 16

போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென்று அக்கட்சியின் அங்கத்தவர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

இக்கட்சியின் தேசிய மகாநாட்டிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது. இம்மகாநாட்டில் கலந்துகொண்ட சுமார் 500 அங்கத்தவர்கள் இம்மாத முடிவிற்குள் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இம்மாற்றங்கள் இடம்பெறவேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

கட்சியின் ஜனநாயக நடவடிக்கைகளை மக்கள் அறிந்துகொள்வதற்கு சந்தர்ப்பமளிக்குமுகமாக மத்திய குழுவின் கூட்ட நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் காண்பிக்கவேண்டுமென்றும் இவர்கள் கேட்டுள்ளனர்,

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடம் போலந்தின் அபிவிருத்தியைப்பொறுத்தமட்டில் பயன்தரக்கூடிய திட்டமெதையும் அமுல்நடத்தவில்லையென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 20-ம் திகதிக்கு முன்னர் நடைபெறவிருக்கும் கட்சியின் தேசிய காங்கிரஸிற்கான தெரிவுகள் நேரடித் தேர்தல்கள்மூலம் நடைபெறவேண்டுமென்ற தீர்மானமொன்றும் இம்மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (வெ)

## பிரிவுபசாரம்

(சுழிபுரம்)

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு ஆ. இராசநாயகத்திற்கு அவ்வூர்ப் பொதுமக்கள் பிரிவுபசாரம் ஒன்றை அளிக்கவுள்ளனர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை எம் பி திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர். (வெ)

## யாருடையது?

மருத்துவ சிகிச்சைக்குரிய உபகரணங்கள் அடங்கிய "காட்போட்" பெட்டி ஒன்று பண்ணைவீதியில் திருப்பதி மோட்டோர்ஸை சேர்ந்த திரு. எல். அலெக்சாண்டர் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

### மணிவாக்கு

கடவுளை அடைவதற்கான மார்க்கங்களுள் மௌனம் மிகவும் முக்கியமானது. ஆத்மசாதகர்கள அனைவரும் அதைப் பழகிவரவேண்டும்,

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## பெரிய வெள்ளி

எந்த மதத்தினர்க்கும் வெள்ளிக்கிழமை ஒரு திவ்ய தினம். பெரிய வெள்ளியின் சிந்தனைகள் கிறீஸ்து மதத்தவர்களுக்கு மட்டும் சொந்தமானவையல்ல.

இயேசுநாதர் தீரரும் ஞானியுமாவர். அவர் நடத்திய போர் அஹிம்சைப் போர். அன்பு, அமைதி யென்ற இரு படைகளைக் கொண்டு நடத்திய போர் அது

அவரைப் பின்பற்றும் ஐரோப்பியநாடுகள் அந்தப் போரைப் பலவீனமானதெனக் கருதின. அது அவரைக் கோழையெனக் கருதுவதற்குச் சமம். இன்று ஐரோப்பாவுக்கு கிடைத்த நலம் என்ன? துன்பம்தான்.

பெரிய வெள்ளி ஒரு பகிரங்க விடுமுறைநாள். சர்வ தேசரீதியில் அதன் மகிமை இன்றும் துலங்குகின்றது. சுமார் இரண்டாயிரம் வருடங்களாக மக்களைக்கவர்ந்து வரும்சம்பவம் இயேசுநாதர் சிலுவையில் அறைபட்டு உயிரிழந்த சம்பவம்.

வெறுப்பவர்களையும் அன்புசெய்தல்—பகைவரையும் பொறுத்துத் தீமைக்குப் பதில் நன்மைசெய்தல் விவிலிய வேதத்தின் ஆணி வேராகும்.

சைவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இந்தக் கிறிஸ்தவ தருமத்தை சிறப்பாகவற் புறுத்துகின்றன.

நன்மைக்கும் தீமைக்கும் என்றுமே போர்நடக்கிறது. தீமைக்குத் தீமை செய்யலாம் என்ற கொள்கையை மக்கள் அனுசரித்தால் உலகத்தில் தீமை வளர்ந்து கொண்டேபோகும். நெருப்பைத் தணிப்பது நீர். நெருப்பைநெருப்புத் தணிக்காது.

இயேசுவின் மலைப்பிரசங்கமே அவருடைய அமைதிப் புரட்சிக்கு முக்கிய காரணம். எனவே அதனை வெறும் வேதாந்தமாகக் கொள்கின்றவர் விமோசனம் காணமாட்டார்.

பெரிய வெள்ளியி அர்த்தம் வெறும் மூளை பலத்தால் கிரகித்துவிட முடியாது. நல்ல இருதயத்தால் மட்டுமே முடியும்.

தமிழ்மக்கள்செய்த தவத்தால் கிறீஸ்துவுக்கு முன்னரே இந்தப் பேருண்மையை இருவரிகளில் திருவள்ளுவர் தீட்டியிருக்கிறார்.

இன்னாசெய்தாரை
ஒறுத்தல் அவர் நாண
நன்னயம்செய்துவிடல்.

தீமை செய்தாருக்கு உபகாரம்செய்து அவர்களை நாணும்படி செய் என்கிறார் முனிவர்.

பழிக்குப் பழிவாங்கும் ஆசை இருந்தாலும், தீமை செய்தவனை நாணச் செய்தலே சிறந்தது. அவனைத் துன்பப்படுத்தும் காரியங்களுள் இது மிகத் துன்பப்படுத்தும் என்கிறார்.

குட்டக்குட்டக்குனிவதை இது சுட்டவில்லை. தேவையானால் விடயம் விளங்காதவனுக்கு குட்டவேண்டிய அவசியம் ஏற்படும். அது அகங்காரம் அல்ல. ஆயினும் அவன் தீங்குசெய்யநேரிட்டால், அவனுக்கு பதிலடியாக நன்மை செய்தலே நல்ல பாடமாகும்.

இன்றைய அரசியலில் இதனைப் பரிசோதிக்க அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

## பத்திரிகைச் சுதந்திரம்

ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அண்மையில் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் நிகழ்த்திய உரையில் தனியார் பத்திரிகைகளுக்கு புகழ்மாலை சூட்டியிருக்கின்றார்.

அரசியல் தந்திரம் நிரம்பிய ராஜாங்க அமைச்சர் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பேசும்போது பத்திரிகையாளர்கள் அவருடைய பேச்சின் உட்கருத்தை கிரகிக்க வல்லவர்கள்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் இரண்டு பெரிய பத்திரிகை நிறுவனங்கள் சுதந்திரமற்ற முறையில் இயங்குவதில் கவலை கொண்டிருக்கின்ற அமைச்சர், அதற்குப் பரிகாரம் தேடவேண்டுமென விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்குச் சார்பாக எழுத வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் பத்திரிகைகளை அரசாங்கம் தானும் எவ்வளவு காலம் இரசிக்க முடியும்.

அதைவிடச் சம்பவங்களை, செய்திகளைத்திரித்து எழுதவேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டால் அதனை நம்பிவாழும் வாசகர்கள் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் முதலிய துறைகளில் மட்டுமல்ல புவியியல் போன்ற சாதாரண விடயங்களில் தவருக விளங்க நேரிடலாம்.

யாழ்ப்பாண அரசியல்-அபிவிருத்திச் சபைத் தேர்தல் பற்றிக் குறிப்பிட்ட இப்பத்திரிகைகளில் ஒன்று, இங்கு ஐ. தே. கட்சிக்கே ஆதரவு அமோகமென்றும், கூட்டணி குலைந்துபோவதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இதுபோன்று முன்னொரு முறை யாழ்ப்பாணம் என்றால் பயங்கரப் பிரதேசம் என்றும், தெருவுக்குத்தெரு குண்டும் கொள்ளையும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இவை இரண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழாத செய்திகளாகையால் வாசகர்கள் பலர் நிருபரின் செய்தி வேறொரு பிரதேசத்தைக் குறிப்பதாகக் கருதுவது இயல்பு!

கட்டுப்பாடுள்ள சுதந்திரம் பத்திரிகையின் கட்டாய தேவை.

### குருபூசை

(யாழ்ப்பாணம்)

பரிபூரணத்துவம் அடைந்த ஸ்ரீலஸ்ரீ நல்லைக் குருமணி பரமாச்சார்ய சுவாமிகளின் 10ம் நாள் குருபூசைவிழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமைகாலை பூர்வாங்கிரியைகளுடன் நடைபெறவுள்ளது மாலை 5மணிக்கு இரங்கல் உரைகளும் பட்டணப்பிரவேசமும் நல்லைஞான சம்பந்தர் ஆதீன இளவரசு ஸ்ரீமத் சோமசுந்தரம்தம்பிரான் தலைமையில் நடைபெறவுள்ளது. (சி)

### இன்று பெரிய வெள்ளி

# பகிர்வின் எல்லையில் சிலுவையில் கிறிஸ்து



வரலாற்றுப் பின்னணியில் ஓர் உருக்கமான உண்மைக் காட்சி கல்வாரிமலைமீது பரமன் கிறீஸ்து சிலுவையிலே தொங்குகின்ற காட்சி கைகளில் இருப்பாணி. கால்களில் கூர்ஆணி, சிரசில் கொடுமுள் முடி, உடலெல்லாம் அடிகாயம், தோள்கள் சிலுவை சுமந்து வீங்கிய கோலம், இரத்தத்தால் சிவந்த பூமியிலே கிறிஸ்துவைப் பெற்றெடுத்த கன்னிமரியாள் கண்ணீர்க் கோலத்தில் துடிக்கிறாள். ஒரு சில உண்மையான கிறீஸ்துவின் சீடர்களும் கூடவே அங்கு நிற்கின்றார். கிறீஸ்துவின் மரணப்போராட்டத்தின் இறுதிக் காட்சிதான் இது.

இத்தனைக்கும் கிறீஸ்துமேல் சுமத்தப்பட்ட குற்றங்களோ எதுவுமில்லை அன்புக்காக அலைந்த திருவுருவம் செய்த அன்புப்பணிக்கு அவனி அளித்த பரிசுதான் இந்தப் பரிதாபச் சிலுவை மரணம்.

நீதிக்காகக் குரல்கொடுத்து - உண்மைக்காக உழைத்து - ஏழை எளியவர்க்குப் புது வாழ்வு அழித்ததுதான், உலகம் அவரைக் கொலைசெய்யத் தூண்டிய எத்தனங்கள்.

என்றுமே உத்தமர்களுக்கு உலகு அளிக்கும் பரிசு இது தான்.

சிலுவைக்காட்சி சிந்தனைக்கு சில உண்மைகளை உணர்த்துகிறது முதலாவது பகிர்ந்து வாழ்தல் அதாவது கிறிஸ்து முற்றுமுழுதாகத் தன்னைப் பகிர்ந்தார், இறைமையில் பகிர்வு மானிடகோலம். இதயத்தில பகிர்வு அன்புப்பணி. அன்பினில் பகிர்வு சிலுவை மரணம்-வெற்றியில் பகிர்வு

— பற்றிமாகரன் —

உயிர்ப்பின் காட்சி, பகிர்வின் மறுபெயர் கிறிஸ்துவின் வாழ்வு என்று கூறலாம். இதன்மூலம் குறைகள் நிறைவுற நிறைகளில் பகிர்வுதேவை என்கிறான் பரமன். ஆற்றலில் பகிர்வு அறிவில் பகிர்வு உணவில் பகிர்வு. உள்ளதில் பகிர்வு இதுதான் கிறிஸ்தவம் கிறீஸ்து தாம் பாடுபடுவதற்கு முதல்நாள் இரவுகூட இரவு உணவின்போது அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து பிட்டுப் பகிர்ந்தார். பின்புதான் "இது என் சரீரம். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார் இதுவே கிறிஸ்தவ ஆலயங்களில் கிறீஸ்துவின் உண்மைப் பிரசன்னமாகத் திகழும். தேவ நற்கருணையின் தோற்றம்.

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்காங்கிரஸ் செயலாளரின் ஒரு விளக்கம்

தங்களது 11-4-81-ம் திகதிய ''ஈழநாடு'' பத்திரிகையில் ''தேசிய அபிவிருத்தியும் யாழ். மக்களின் ஒத்துழைப்பும்'' என்ற தலைப்பின்கீழ் வெளி வந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பாக பின்வரும் கருத்தைக் கூறவிரும்புகிறேன்.

''ஐ தே கட்சி சார்பில் போட்டியிட்ட அருணாசலம் மகாதேவாவைத் தோற்கடித்தவர் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி ஜி. பொன்னம்பலம் அவரும் பின்பு ஐ. தே. கட்சியில் சேர்ந்து அமைச்சரானதும் தமிழரசுக் கட்சி வலுப்பெற்றது'' என்று ஆசிரியர் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது வரலாற்று உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டதும் நியாயமற்றதுமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அமரர் மகாதேவாவைப்போல அமரர் பொன்னம்பலம் ஒரு பொழுதும் சேரவில்லை. அக் கட்சியின் சார்பில் போட்டியிடவும் இல்லை. அதனைத் தமிழ்ப்பகுதிகளில் வளர்க்க உதவவும் இல்லை. மாறாக, அக் கட்சியை எதிர்த்தார் தமிழ் மக்களின் நலனுக்காக உழைக்கும் தமிழ்க்காங்கிரஸை உரு

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

## நாடும் நடப்பும்....

தினசரி பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளில் சில தலைப்புக்கள் மட்டுமல்ல, செய்திகள் சிலவும்கூட ரசித்துச் சிரிக்கக்கூடியவை.

இரண்டு தினங்களுக்கு முன் வந்த பத்திரிகைச் செய்தியொன்று 'இரண்டு சமாதான நீதவான்களுக்கிடையில் கத்தி வெட்டு' என்று முதல் பக்கத்தில் வெளி வந்திருந்தது.

சமாதான நீதவான்களே கத்திவெட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் சாதாரணங்களுக்கிடையில் ஏற்படும் தகராறுகளுக்குச் சமாதானத் தீர்வு காண்பது யார்?

0 0 0

மற்றொரு பத்திரிகைச் செய்தியில் இலங்கையிலிருந்து குவைத் நாட்டுக்கு வேலை தேடிச்சென்ற ஒருவர் அங்கு நகைகள் திருடியதாகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார் என்பதாகும். இப்படிக் கைதானவர்தங்கியிருந்தஅறை சோதனையிடப்பட்ட போது மேலும் பல நகைகள் அங்கிருந்து மீட்கப்பட்டனவாம்!

'உயரப்பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது' என்பது தமிழிலுள்ள ஒரு பழமொழி. உலகில் வரிவசூலிக்காத ஒரே ஒருநாடு குவைத் என்றுசொல்வார்கள். அங்கு செல்வம் செழித்துக்கிடக்கிறதாம் இப்படியிருந்தும் அங்கு போய் களவுத் தொழிலில் ஈடுபடுபவர்களை என்னவென்று சொல்வது? "அந்தப் புத்தி போகாது" என்கிறார் நண்பர் ஒருவர்.

0 0 0

யாழ் திறந்தவெளிஅரங்கின் மேடை திருத்தப்பட்டுள்ளதாக யாழ் மேயர் திரு இராசா விசுவநாதன் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள வசதியான பெரிய மேடை யாழ். திறந்தவெளி அரங்கிலுள்ளதுதான்.

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும்கொண்ட பெரிய மண்டபம் ஒன்று இல்லாதிருப்பது பெரும் குறை. இதுபற்றிப் பலரும் பல தடவைகளிலும் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

பலரும் பல இடங்களிலும் கலா மண்டபம் கட்டவேண்டுமென்றும், பணிமண்டபம் கட்டவேண்டுமென்றும் அடிக்கடி கூறிவருகின்றனர். இதற்கான முயற்சிகளையும் சிலர் மேற்கொண்டதுமுண்டு. அத்திவாரமும் சில இடங்களில் இடப்பட்டிருக்கிறது.

நாவலர் பெருமான் சிலை யாழ்ப்பாணத்துக்குக்கொண்டு வரப்பட்டபோது, யாழ் திறந்த வெளி அரங்கு மேடையுடன் சேர்த்து பெரியஅழகான விசாலமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டது அங்கு பல நிகழ்ச்சிகளும் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்றன.


அந்தப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தபோது கொழும்பிலுள்ள 'நவரங்கஹல' மண்டபம் போன்று திறந்தவெளி அரங்கையும் மாற்றியமைக்கலாமென்று சிலர் யோசனை தெரிவித்தனர்.

இப்பொழுதும் இதைச் செய்வதற்குக் காலங்கடந்துவிடவில்லை.

வெவ்வேறு இடங்களிலும் மணிமண்டபங்களையும் கலா மண்டபங்களையும் கட்டமுனை

(8ம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்



## தாயே பணிந்தோம்

தெல்லி நகரிற் கோயில் கொண்டு
தொல்லை வினைகள் நீக்கி அருளும்
துர்க்கை என்ற தேவீ வணக்கம்
உலகம் அனைத்தும் ஒருங்கே ஈன்று
உயிர்கள் அனைத்தும் உய்தி எய்த
கருணை என்ற மழையை நல்கும்
துர்க்கைத் தாயே பணிந்தோம் நாமே.

— கோபாலசாமி.

# துர்க்கையைத் துதித்தே துயர்களைத் தவிர்ப்போம்

பராசக்தியே துர்க்கை என்னும் பெயரும், வடிவமும் கொண்டு, பக்தர்களுக்கு அருள் புரிந்து, உலகைப் பரிபாலித்து வருகின்றாள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுகமுடியாமற் செய்வதுபோல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகா வகையிற் காத்தலால், இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். துர்க்கை அரசர்க்கும், வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வம். ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில் கௌரி, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஒருருவமாகத் திகழ்பவள் துர்க்கை. இவள் அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்னும் மூக்கூறும் தன்பாற் கொண்டவள். நாம் நம் ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி, துர்க்கருந்தம் என்னும் மந்திரம் ஓதி அருச்சனைசெய்து வழிபட்டால், எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு, சக்கரம், வில், அம்பு ஏந்தியிருப்பாள். தலையில் முடியும் பிறையும் சூடியிருப்பாள். சிங்க வாகனமும், பசும்புல்லின் நிறமும் கொண்டவள்.

மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத்தலையை உடையவனாக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனால் இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்தின் பல கோயில்களிலும் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம், கங்கைகொண்ட சோழபுரம், நாமக்கல் முதலிய

**ந. ரா. முருகவேள்**
(ஆசிரியர், 'திருக்கோயில்')

இடங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புதச் சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் திருவுருவத்தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்துகாட்டியுள்ளார்.

அவள் யானைத் தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலை மேல் நிற்கின்றாள். வானோர்கள் வணங்க மறைமேல் மறையாகி ஞானக் கொழுந்தாய் விளங்குகின்றாள். வளையணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்றாள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி, அரன், அயன் என்னும் மூவரின் இதய மலர்களில சோதி விளக்காகச் சுடர்வீசி வயங்குகின்றாள். அவளது தாமரை போன்ற கைகளில் சங்கும், சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின் மீது இவர்ந்து வருகின்றாள் சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணிபுரிகின்றன.

அத்தகைய சிறப்புமிக்க துர்க்காதேவியம்மையின் திருக்கோயில், இலங்கை யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் சிறப்புற அமைந்து வரும் சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் மாகும்பாபிஷேகவிழா சிறப்புற நிகழவிருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். விழா மிகவும் சிறப்புற நிகழ்வதற்கு அருள்மிகு துர்க்காதேவியம்மையின் திருவடிகளைச் சிந்தித்து

(8ம் பக்கம் பார்க்க)

## இந்துமாமன்றத் தலைவர் வாழ்த்து

மூர்த்தி, தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு புராதன நகுலேஸ்வரத்துக்கும், புகழ்மிக்க மாவிட்டபுரத்துக்கும் அண்மையிலுள்ள தெல்லிப்பழையில் அமைந்துள்ள அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் இன்று பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் சூழும் புண்ணியத்தலமாக விளங்குகின்றது.

புராதனமான இவ்வாலயம் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் எய்தியுள்ள வளர்ச்சி அம்பாளின் அனுக்கிரகத்திற்குக் கண்கண்ட சாட்சியாகத் திகழுகின்றது. துர்க்காதேவி அம்பாள் தினமும் புரிகின்ற அனுக்கிரகத்துக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்வதற்கெனப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு குழுமுவது தினசரி வழக்கமாகி வருவதை அறியும்போது அம்பாள் புரிந்துவரும் புதுமைகள் நம்மையெல்லாம் சிலிர்க்க வைக்கின்றன.

இவ்வாறு அருளும் புகழும் ஒருங்கு கூடி விளங்கும் துர்க்காதேவி திருக்கோவிலில் மூலமூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் பல லட்ச ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்துக்கும் மகாகும்பாபிஷேகப் பெருவிழா இப்போது நடைபெறுவது சைவ உலகுக்கு எழுச்சியும், பக்தர்கள் உள்ளங்களுக்குப் புதிய மலர்ச்சியும் தரும் வைபவமாகும்.

சைவப் பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றிவரும் "துர்க்காதுரந்தரி" பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் அமைந்த நிர்வாக சபையினரின் தொண்டு சைவ மக்களால் போற்றப்படவேண்டியது.

பெருஞ்சாந்திவிழாக்காணும் துர்க்காதேவியின் கருணை கடாட்சம் எம் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்!

**வீ. சிவசுப்பிரமணியம்**
தலைவர்,
(அ. இ. இந்துமாமன்றம்)

## 3 ஆண்டுகளில் ரூ. 9 லட்சம்செலவில் நிறைவேறிய இராஜகோபுரம்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் துர்க்கை அம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்ட பழமையான தனிப்பெருங் கோயிலாக ஈழத்தின் வடபால் தெல்லிப்பழையில் பொலிவுடன் அமைந்துள்ளது. வரலாற்றுப்பெருமை மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துடன் நீண்டகால நெருங்கியதொடர்புகொண்டது இத்தலம். மாவை முருகப் பெருமான் ஆலயத்தில் கிடைக்கப்பெற்ற ஏட்டுச்சுவடிகளில் குறிக்கப்பட்டுள்ள செய்திகளின்படி அத்தலம் வெண்கல்

— சு. சிவவாகீசர் —
செயலாளர், தர்மகர்த்தாசபை

திருப்பணி நிறைவேறி 1815ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று ஐந்து ஆண்டுகளின் பின் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு சிறிதுகாலம் சிலமடைந்த நிலையிலிருந்து கோயிலைப் புனருத்தாரணம் செய்ய அம்பாள் அடியார்கள் முன்வந்தனர். ஆலயத் திருப்பணிகள் 1953-ம் ஆண்டில் ஆரம்பமாகி 1965-ம் ஆண்டு ஆவணித்திங்கள் திருவோணத்தில் மகா கும்பாபிஷேகம் மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ து. சண்முகநாதக்குருக்களால் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் ஆலய மண்டபங்களை அமைக்கும் திருப்பணி, புதிய சித்திரத்தேர் திருப்பணி இராசகோபுர திருப்பணி போன்ற பாரிய திருப்பணிகள் அசுர வேகத்தில் நடைபெற அம்பாள் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றது ஆலய நிர்வாக சபைத் தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் துர்க்கை ஆலயத்தின் முழுநேரத் தொண்டராக விளங்குவதுடன் அவர் தமது சமய சொற்பொழிவுகள் மூலம் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் அம்பாள் அருளைப் பரப்பி அங்காங்குள்ள பக்தர்கள் எல்லோரும் துர்க்காதேவி ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்து திருப்பணிக்கு நிதி வழங்கியுள்ளனர். ஆலயத்திருப்

(8-ம் பக்கம் பார்க்க)

## நல்ல வண்ணம் வாழ இன்று வழிதோன்றும்

திருமுறை ஓதுதல், புராணபடனம் செய்தல், சித்தாந்த சாஸ்த்திரங்களைச் சிந்தித்தல், ஏழிசை இன்பத்தை இயங்க வைத்தல் இவையெல்லாம் துர்க்காபுரத்திற்குரிய பண்பாகும்.

வேதசிவாகம வித்தகர்கள் விதிமுறைவழுவாது சிவாசாரியக் கிரியைகளைச் செய்யும் சிறப்பினைக்காண்போர் இங்கு திருக்கயிலாய பரம்பரைச் செந்நெறியை நினைந்து களிப்பர்.

திருமுறை ஓதும் பயிலும் சிவனடியார்கள் தரும் பண்ணிசை பசுமையின்பமும் நாதசுரக்கலைஞர்கள் கூட்டும் இசையின்பமும் புராணங்களிற் புகழப்பெறும் கிம்புருநாதர்களின் கீதவின்பம் எவ்வாறிருக்கும் என்று ஒருவாறுணர்வர்.

தொண்டு புரிந்து துர்க்காதேவியின் திருத்தலத்தில் தூய்மையைப் பேணிக்காக்கும் பண்பாளர் திருக்கூட்டத்தின் அயராத் தொண்டினை உற்று நோக்குவோர் துர்க்கா சூழலிலே தெய்வீக மின் ஆற்றல் நிலவுகின்றதென்றறிந்தின்புறுவர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக எண்ணுக்கடங்காப் பக்தர் குழாத்தின் அன்புப் பரவசப் பிரவாகம் துர்க்கையின் அருள் நீரூற்றைப் போன்றிருப்பதே புதுமை.

புத்தாண்டுப் பெருந்திரு நிகழ்ச்சியாகும் மகாகும்பாபிஷேகம், மூலமூர்த்திக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் இராஜகோபுரத்துக்கும் சாந்திவிழா, நடைபெறும் பொழுது மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிதோன்றும்.

நம சிவப்பிரகாசம்
(ஆசிரியர் இந்துசாதனம்)

## பக்திபூர்வமாக வழிபட்டால் இலங்கைபுண்ணியபுரமாகும்

சகல ஐஸ்வர்யங்களையும் தரவல்லது முறையானதும் தொடர்ச்சியானதுமான துர்க்காவழிபாடு. ஜகத்தை நல்வழிப்படுத்த முடியுமான மகாசக்தி, துர்க்கா வழிபாட்டால் இயலுமென வியாசர் பஞ்சபாண்டவர்களுக்கு எடுத்துரைத்துள்ளார். பிணி, வறுமை, மயக்கம், பகை, ஆகியனவற்றை நொடிப்பொழுதிலே நீக்கும்சக்திவாய்ந்தது துர்க்காவார வழிபாடு. இப்படியிப்படியே ஜீவர்களுக்கு வேண்டப்படும் இஷ்டாம்சங்களைத் தரவல்லது ஒழுங்கான துர்க்கா ஆராதனையாகும்.

நூல்கள் கூறுகின்றன.

இராஜவஸ்யம், கஷ்டநிவர்த்தி, மஹாபய நிவர்த்தி, பிணி, பகை, அச்சம் நிவர்த்தி மற்றும் சகல சௌபாக்கியம் பேறடைய, நாடு நலம்பெற, உலக க்ஷேமம் உண்டாக துர்க்கா சப்தசதி மந்திர ஆராதனை உறுதுணைதருகிறது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மேற்கூறியவற்றை நடப்பிக்கச் சகல வசதிகளையும் பெறுபேறுகளையும் பெற்றிருப்பது ஈண்டு கவனிக்கற்பாலது. ஆலய அமைப்பு, பிரகாரவரிசை, ஆலய வர

**மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள்**
(மாவை ஆதீனகர்த்தா)

துர்க்கா ஆராதனைக்குத் தேவியின் பிரீதிக்காக சுவாஸினி (சுமங்கலி)பூசை, "குமாரி பூசை", "வடுக பூசை" முறையாகச்செய்யப்படல்வேண்டும். இரண்டு வயது முதல் பத்து வயதுவரையுள்ளகுமாரிகளுக்கு முறையே, குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா என்றபடி வரிசைப்படுத்தி சகல காரியசித்தியின் பொருட்டு பிராம்மணகுல குமாரிகளையும், ஜெயத்தின் பொருட்டு க்ஷத்திரிய குமாரிகளையும், க்ஷேமலாபங்களுக்காக வைசிய குமாரிகளையும், அபிவிருத்திகளுக்காக சூத்ர குமாரிகளையும் முறையாகப் பூஜிப்பது மேலானதாகுமென

லாற்றின் தொன்மை, உபாசனைக்கிரமம், மந்திரஸ் தோத்திரப்பெருக்கம், உற்சவமகத்துவம் ஆதியன சிறப்பம்சமாக இருக்கின்றன. பக்தர்கள் மிகுந்தபக்திபூர்வமாக துர்க்காதேவி ஆராதனைகளை நடாத்துவார்களாயின், அமைதியான புண்ணிய புரமாக மாறும். காமதேனுவைப் போன்று யாவற்றையும் தரவல்ல துர்க்காதேவியை வழிபட்டு, அருளுக்குப் பாத்திரமாகுதல் மனிதப் பிறவி எடுத்ததின் பயனாகும். இந்த சீரிய கும்பாபிஷேகத்தோடு இதற்காக நாமனைவரும் சங்கற்பிப்போமாக.

## புங்குடுதீவு-ஊரைதீவு பெத்தப்பு ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய

# மகா கும்பாபிஷேக மலர்

## மலர்சிறப்புற உதவிய அன்பர்கள்

★ கணேசன் ஸ்ரோர்ஸ்,
37, பஞ்சிகாவத்தை ரோட்.
மருதானை,
கொழும்பு.

★ ஸ்ரீ முருகன் லொட்ஜ்,
92, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.

★ நியு லக்ஷ்மி பவான்,
5, பஞ்சிகாவத்தை ரோட்,
மருதானை,
கொழும்பு-10

★ ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்,
3, மனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.

★ கே. மார்க்கண்டு,
19, பஞ்சிகாவத்தை ரோட்,
மருதானை.

★ சு. குமாரசாமி,
55, பெரிய கடை
மார்க்கற்,
யாழ்ப்பாணம்.

★ கந்தவிலாஸ்,
பெரியகடை, மன்னார்.

★ பெ. ஆறுமுகம்,
122, கந்தரோடை வீதி,
சுன்னாகம்.

★ அ. கனகலிங்கம்,
78, ஸ்ரேசன் வீதி,
சீதுவ.


★ அ. இரத்தினசிங்கம்,
81, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

★ அ.ப. பாலசுப்பிர மணியம்,
ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் விலாஸ் சேர்விஸ்,
கடற்கரை வீதி,
புங்குடுதீவு-7.

# அண்டியவர்க்குவினையகற்றி அருள்பாலிக்கும் முருகப்பெருமான்

- கு. சண்முகலிங்கம் -

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பகுதியில் சிறப்பும் பெற்ற புங்குடுதீவில் ஊரைதீவு என்னும்சிற்றூரில், அக்கிராம மக்களின் காவல் தெய்வமாகவும், அண்டியவர்க்கு வினையகற்றி அருள்



புதுப்பொலிவுடன் விளங்கும் பெத்தப்பு முருகன் ஆலயததின் தோற்றம்.

பாலித்துவரும் தெய்வமாகவும் விளங்குவது பெத்தப்பு முருகன் ஆலயமாகும். இவ்வாலயம் மூன்று தலைமுறையினருக்கு முந்திய காலந்தொட்டு, பிரபல்யம் பெற்றுவிளங்குகின்றது. இவ்வாலயம் பற்றிய சான்றுகள் பலரால் பல்வேறு விதமாக எழுதப்பட்டாலும்கூட, கடைசியாக கிடைத்த தகவல்களே இவ்வாலயம் அமைந்ததற்குச் சான்றாக இருந்திருக்கின்றன.


ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தை அமைத்த பண்டித ஐயா அவர்கள், எழுதிய சுவடிகளில் இவ்வாலயம் அமைவதற்கான காரணங்களும், அற்புதங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பண்டித ஐயா அவர்கள் ஒரு முருகபக்தர். தம்மை அண்டியவர்களின் இன்னல்களைக் களைந்து ஆறுதல் அளிப்பவர். இல்லார்க்கு இயன்றளவு உதவுபவர். இதனால் அக்கிராமமக்கள் இவர்மேல், அளவுகடந்தபாசம் வைத்திருந்தனர். இக்காலகட்டத்திலே இக்கிராமத்தைக் கலக்கிய கொடியபஞ்சம் ஏற்பட்டது. நெல்லும் மணியும் வளம்குன்றி. குடிப்பதற்குக் கூட நீரில்லாமல் மக்கள் திண்டாடினர். மக்கள் செய்வதறியாது பண்டித ஐயாவின் இல்லம் நோக்கி விரைந்து உதவி கேட்டனர். நாடு பஞ்சத்தால் அல்லலுற்றபோது பண்டித ஐயா என்ன செய்வார். முருகா! முருகா! இது என்ன சோதனை. என்னையும் என்னை அண்டியவரையும் நீயே எடுத்துக்கொள் என, முருகனை நினைத்து நோன்பிருந்தார்.

சில தினங்களில் அவருக்கு முருகப்பெருமான் கனவில் தோன்றி இப்பகுதியில் ஆலயமொன்றை அமைத்து வழிபாடு செய்வாயானால் 14 தினங்களிலே கிராமம் செழிக்கும் என அசரீரி வாக்குக்கிடைத்தது.

பண்டித ஐயாவும் தெய்வ வாக்கையெண்ணி, பலமைல்கள் கால்நடையாகச் சென்று பொன்னும் மணியும் காணிக்கையாகப் பெற்று ஆலயம் ஒன்றை பெத்தப்பு என்னுமிடத்தில் நிறுவினர். தெய்வ வாக்கு வீண்போகவில்லை. நித்திய கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 14 தினங்கள் நிறைவு பெற்ற அன்றே நாடு செழிக்கும் வகையில் மழைபொழிந்து குளங்கள் நிரம்பின.

அதிசயம் கொண்ட மக்கள். அன்றுமுதல் இன்றுவரை முருகப் பெருமானுக்கு விசாக தினத்தன்று, விசேட பொங்கலிட்டு தம்குறையைச்கூறி அருள்வேண்டி வருகின்றனர். காலங்கள் நகர்ந்து கொண்டு போகையில் இவ்வாலய நிர்வாகத்தை குழந்தைவேலு அருணாசலம் என்பவர் நிர்வகித்து வந்தார். அவரைத் தொடர்ந்து பெரியதம்பி ஆறுமுகம் அவர்கள் நிர்வாகம் செய்து வருகின்றார்.

இவ்வாலயம் தற்போது பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், வைரவப் பெருமானுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனையொட்டிய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை (17-04-81) காலை 9-30 மணி தொடக்கம் 11-00 மணிவரையும் வரும் சுபவேளையில் நடைபெறுகின்றது. கும்பாபிஷேக கிரியைகளை பிரதிஷ்டா குருமணி சிவஸ்ரீ மு! பரமசாமி குருக்கள் நிறைவு செய்துவைப்டார். அவனை அடைந்தால் ஆகாதது ஒன்றில்லையென்ற எம்மக்களது நம்பிக்கை என்றும் வீண்போகாது.



ஆலயத்தின் முன்பாகவுள்ள வைரவர் ஆலயம்.

## எம்மவர்க்கு பெத்தப்பு முருகனில் அதிக ஈடுபாடு

ஆ. சிவலோகநாதன்

நம் செயலெல்லாம் கடவுள் செயல், அவன் ஆட்டுகின்றான், நாமெல்லாம் ஆடுகின்றோம்.

அவனின்றி அணுவும் அசையாது, இவையெல்லாம் சந்ததி உருமாற்றம் பெற்ற காலந்தொட்டு மக்களால் பேணப்பட்டு வரும் உண்மைகள். அண்டத்தை ஆய்வு செய்யும் மனிதன், இறைவன் உண்டா இல்லையா என ஆய்வு செய்ய மறுக்கின்றான்.

ஆய்வுக்கு முன்னர் என்னைக் காப்பாற்று என அவன் மனம் ஓலமிடத்தான் செய்கிறது. சுருக்கமாகச்சொல்லப்போனால் இறைவனை எல்லோரும் நம்பித்தான், வாழ்கிறார்கள். வாழ்க்கை நம்பிக்கையில் ஓடிக்கொண்டிருக்கிறது. நாஸ்திகம் பேசுபவனும், இறைவனை நம்புகிறான். மதத்தை அபின் என்று வாதம் புரிந்தாலும், மதம் வளரத்தான் செய்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வோர் தெய்வத்தில் நம்பிக்கை.

அவனும் தனது வழிபாட்டுக்கு ஆலயங்களை அமைக்கத்தான் செய்கிறான்.

ஆலயங்கள்இல்லாதஊருக்கு அழகுபாழ், என்பது எவ்வளவு பொருத்தம்.

ஆலயங்கள் பலஇருந்தாலும் அவ்வூர் மக்களுக்கு பெத்தப்பு முருகனில்தான் அதிக ஈடுபாடு. அவனின்றி எதுவுமில்லையானால் அவன் அருள் எல்லோர்க்கும் தேவைதான்.

எல்லோரும் அவன் புகழ் பாடி பயன்பெறுவோம்.

## இன்றைய கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

17-04-81 காலை 7 மணி தொடக்கம் மஹா யாக பூஜை, விதூபி கும்பாபிஷேகம், 9-30 தொடக்கம் 11-00 மணிவரை வரும மிதுனலக்னத்தில் கலியுக வரதனாகிய முருகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். பின் தசதர்சனதிகள் யஜமான் அபிஷேகம், மஹாபிஷேகம், விஷேட் தீபாராதனைகள், குருமார்கள் சம்பாவனைகள், விபூதிப் பிரசாதம் வழங்குதல். இரவு 8-00 மணிக்கு சுவாமி உள்வீதி வலம் வரும்.

பகல், அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நாற்பது கோவிலில் சாலச் சிறந்தது

ஈழம் என்றொரு இனிய தமிழ் நாட்டில்
பாரோர் போற்றிடப் பலர் கூடிவாழ்ந்தனர்
தாளம் சலாரி யாழுடன் வந்து தன்
பெயர் சூட்டினார் யாழ்ப்பாணர்
காலம் கடந்த பெரும் கனிகொணாத் தீவுனுள்
காட்சி கொடுத்ததோர் புங்குடுதீவு
ஞாலம் விளங்கிய நாற்பது கோவிலுள்
சாலச் சிறந்ததாம் தமர் காக்கும் பெத்தப்பு
வேலுண்டு வினை இல்லை என எண்ணி மக்கள் தாம்
பரர் கொண்டமுருகன் எனப்பதபாய் அழைக்கின்றார்
பால் கொண்டு பழம் இட்டு பணிசெய்து ஆறுமுகம்
மேலும் பணிசெய்து பயன் பெறவே வாழ்த்துகிறோம்

— சி. க. நல்லையூரன்

நாகம்ஸ் (மன்னாகம்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
மீனவநண்பன்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30;
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சுஜாதா
உறவு சொல்ல
ஒருவன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
வல்லவன்
ஒருவன்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-விஜயா
தங்கை
(புதிய பிரதி)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

சாந்தி (யாழ்நகர்) கடைசித் தினம் 19-4-81 போன்: 7643
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்
20-4-81 "AUDREY ROSE"
(Color - Adults only)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
நகரில் திரையிடப்பட்ட படங்களில் முன்னணியி லுள்ளது. பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30. தினசரி: 2-30, 6-15, 9-30
● பாக்கியராஜ் ● ரதி ● சதிஸ்ரீ
புதிய வார்ப்புகள்
(சுஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
★ சிவாஜி ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா
★ சுந்தரராஜன் நடித்த
ரிஷிமூலம்
(ஈஸ்ட்மன் கலர்)


# தனிநாயகம் அடிகள் நினைவு

## கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

நுணுவில் கிழக்கு சர்வ சாதன சங்க சனசமூக நிலையம் 'ஈழநாடு' ஆதரவுடன் நடத்திய அருட்திரு தனிநாயகம் அடிகள் ஞாபகார்த்தக் கட்டுரை, கவிதைப்போட்டிமுடிவுகள் வருமாறு;-

### கட்டுரை

1-ம் பரிசு வெள்ளிப்பதக்கம்: (எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்) செல்வன் செ. ஸ்ரீதவரட்ண ராஜா, சபாபதி வீதி, கொக்குவில்.

2-ம் பரிசு - வெள்ளிப் பதக்கம் 1, (வி, எம். கே. ஜுவலறி) செல்வி க. வசந்தி, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,

3-ம் பரிசு - ரூபா 100/- பெறுமதியான உள்ளூர் உற்பத்திப் பொருள் (சி. நவரத்தினம் கைத்தறி மாளிகை, சாவகச்சேரி) - செல்வி ரதி வேலுப்பிள்ளை, மாவிட்டபுரம்,

சிறப்புப்பரிசுகள்: செல்வன் ரமேஷ் வேதநாயகம், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை. திரு எஸ் பி. கிருஷ்ணன், கலைமகள் ச.ச நி. தென்மட்டுவில் சாவகச்சேரி.

### கவிதை

1-ம் பரிசு: வெள்ளிப் பதக்கம், (மில்க்வைற்) ம. வி. நா, யாழ், வேம்படி வீதி.

2-ம் பரிசு; வெள்ளிப் பதக்கம் (கிளிநொச்சி கலா டிரேடர்ஸ்) கல்வயல் வே. குமாரசாமி,

3-ம் பரிசு; ரூபா 00/- பெறுமதியான சில்வர் தட்டம் (மூசிகவாகன தொழிலகம், சாவகச்சேரி) செல்வன் மா. முரளிதரன், 12, வில்வம்தெரு, அரியாலை.

சிறப்புப் பரிசுகள்:- திரு. க. த. ஞானப்பிரகாசம், அல்வாய், திரு, வ, ஜீவநாதன், பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்

நாளை சனிக்கிழமை மாலை நடைபெறும் நிலைய ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படும். பரிசுபெறுபவர்களுக்கு இரவு தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக நிலையச் செயலாளர் திரு எஸ், செந்தில்மணி அறிவித்துள்ளார்.

### செய்தி

நிலையத்தின் சார்பில் அதன் செயளாளர் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:

திருவள்ளுவர் வழிநின்று உலகமெங்கும் தமிழ்பரப்பும் நிறுவனத்தின் தந்தைக்கு நாம் எடுக்கவுள்ள நினைவு விழாப் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கும். போட்டி சிறப்புற ஆசிகள் வழங்கியவர்களுக்கும், பலவகையில் ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கிய 'ஈழநாடு' நிறுவனத்திற்கும், பரிசுகள் வழங்கிய அன்பர்களுக்கும் எமது சங்கம் என்றும் நன்றியுடையது, அடிகளார் பணியை அனைவரும் தொடர்வோம்."

(விழா நிகழ்ச்சிகள் நாளை இதழில் வெளிவரும்.)

# "காங்கேசனில் நவீனசந்தை விரைவில் நிறுவப்படும்"

## 'காங்கேசன்ரவல்ஸ்' ஆரம்ப விழாவில் அமிர்"

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் சகல வசதிகளும் பொருந்தியதாக நவீன சந்தை ஒன்று விரைவில் அமைக்கப்பட விருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

"காங்கேசன் ரவெல்ஸ்" தனியார் பஸ் சேவைகளையும், டீசல் வாகனங்கள் பழுதுபார்க்கும் கராஜையும் நேற்று மாலை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இத்தகவலை தெரிவித்தார்.

திரு. அ. குமரகுரு தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அமிர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பல்வேறு துறைகளிலும் சிறப்பு வாய்ந்ததாக காங்கேசன்துறை விளங்குகிறது. தமிழ் ஈழத்தின் மூளை வடமராட்சி என்றால் அதன் இதயம் காங்கேசன்துறையாகும். எமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும் வசதியாக காங்கேசன் துறை விளங்கப் போகிறது. தமிழ் ஈழத்தின் துறைமுகங்களாக காங்கேசன்துறையும், திருமலையும் விளங்கப்போகின்றன. எனவே இத்தொகுதி பலதுறைகளிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இந்தஅபிவிருத்திக்கு உதவும் வகையில் மக்களுக்கு போக்குவரத்து வசதியளிக்கும் வகையில் இன்று திரு. க. இஜயபாலசிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை விரிவுபடுத்தப்பட வேண்டும். வருவாய்க்கு மட்டும் சேவை நடத்தாமல் மக்கள் வசதிக்காக சேவை நடாத்தப்பட வேண்டும்" என்றார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு தா. திருநாவுக்கரசு பேசுகையில்:

"ஈழத்தின் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் வகையில் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப்பாராட்டினார்.

இன்று வடபிராந்திய போக்குவரத்துச்சபையிலிருந்து மேலதிகமாக உள்ள 275 ஊழியர்களை வேலை நீக்கம் செய்யவுள்ளனர். அவர்களுக்குக் கைகொடுக்க இந்த தனியார் சேவையால்தான் முடியும். இளைப்பாறும் போக்குவரத்து ஊழியர்களுக்கும் தனியார் சேவையினர் வேலை வழங்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. மு. கனகரத்தினம் பேசுகையில், மிக விரைவில் தனியார் துறைக்கு புதிய சட்டங்கள் வரவிருப்பதாகவும் அச்சட்டங்கள் வந்தபின் எமது பஸ் வண்டிகளுக்கும் தனியார் பஸ் வண்டிகளுக்கும் போட்டியிருக்காது என்றும் கூறினார்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. தியாகராசா, காங்கேசன்துறைப் பட்டின சபை ஆணையாளர் திரு. சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. தியாகராசா நன்றி தெரிவித்துப் பேசினார்.

திரு. அமிர்தலிங்கமும் மற்றும் பலரும் புதிய பஸ் சேவைகளை ஆரம்பித்து வைத்தார்கள். இந்து, பௌத்த குருமார்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (அ)


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்: 881 (கலர்)


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 5-ம்திகதி
வெள்ளிக்கிழமை
(17-4-1981)

மேடம்- உணவு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும், நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படும், ஏமாற்றம் ஏற்படும், அமைதி நன்று.

இடபம்- வாழ்க்கையில் தென்றல் வீசும், கணவன்-மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும், மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள், சுகபோக நாள்.

மிதுனம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கலாம், நன்றாகச் சிந்தித்தபின் செயலாற்றுக.

கடகம்- புண்ணிய காரியங்களில் உற்சாகம் பிறக்கும், கவர்ச்சிகரமானதினம், பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு, இல்லத்திலும் இனிமைக்கு இடமுண்டு.

சிங்கம்- பதவியில் உயர்வுக்கு இடமுண்டு, வியாபாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும், இடமாற்றத்துக்கான ஆலோசனையும் உருவாகும்.

கன்னி- பெரியோர் ஆதரவுக்கு இடமுண்டு, தொழிற்துறைகளிலும் நன்மாற்றங்களுக்கு இடமுண்டு, குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை உருவாகும்.

துலாம்- தொழில்துறையில் நஷ்டத்திற்கு இடமுண்டு, கடன் தொல்லைகள் அதிகரிக்கும், புதிய முதலீடுகளை தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

விருச்சிகம்- புனைந்துரைகளால் மனது புண்படும், அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும், சகாக்களின் விரோதத்தைச் சம்பாதிக்க நேரிடும், வேண்டுவது பொறுமையே.

தனு- வாழ்க்கைப்பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் இடம் பெறும், காரியத்தில் கண்வைக்கவும், மகிழ்ச்சிகரமானதினம்.

மகரம்- நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிறகடிக்கும், கருத்துவேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும், பொறுமைவேண்டும்.

கும்பம்- பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம், மாணவர்களாயின் அதிக முன்னேற்றமுண்டு, தாய்வழிப் பெருமையும் உண்டு.

மீனம்- மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும், திரவிய லாபத்துக்கும் இடமுண்டு, இரக்க சிந்தை மேலிடும், புத்திர மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
நிருமலை
க. வேலுப்பிள்ளை

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## கத்திக்குத்துச் சம்பவம்

# சமாதான நீதவானுக்கு 21-ம் திகதி வரை றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமாதான நீதவான் ஒருவரை வழி மறித்து கத்தியால் குத்தியதாக குற்றம் சாட்டி சங்கானைப் பொலிசாரினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வி. கந்தசாமி என்ற மற்றொரு சமாதான நீதவானை இம்மாதம் 21-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வி. தெய்வேந்திரம் என்ற மேற்படி நபரை வழி மறித்து கத்தியால் வெட்டிப் படுகாயப் படுத்தியதாக அதே இடத்தைச் சேர்ந்த வி. கந்தசாமி என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. கத்தி வெட்டுக்குள்ளான தெய்வேந்திரம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## முருகமூர்த்தி தேர்

(மாவிட்டபுரம்)

மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது.

## நாடும் நடப்பும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வோர் யாழ். திறந்தவெளி அரங்கை பெரிய கலா மண்டபமாக அமைப்பதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க முன்வந்தால் மாநகரசபை மறுக்கவாபோகிறது?

-ஊர்சுற்றி

## 6 ஆண்டுகளில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி

பணிகள் முட்டின்றி நடைபெறுவதற்கும் அம்பாள் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்குவதற்கும் பக்தர்கள் பேராதரவு புரிந்துள்ளனர்.

ஆலயத்தின் கிழக்கு நோக்கிய வாசலில் பொலிவுடன் திகழ்கின்ற இராச கோபுரம் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. ஐந்து வாயில்களையும் அறுபத்துமூன்று அடி உயரத்தையும் கொண்ட இக்கோபுரம் புராண சம்பந்தமான சிற்பங்களையும் மற்றும் வடிவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழகத்திற்குச் சென்று சென்னை ஞானானந்த சமாஜத் தலைவராகிய ஸ்ரீஹரிதாஸ் கிரிமகராஜ் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ் நாட்டில் கலை சிறந்த ஸ்தபதி வளவனூர் எஸ். தேவலிங்கம் அவர்களின் தலைமையில் கட்டிடக் கலைஞர்களை ஒழுங்கு செய்தார். இக்கட்டிடக் கலைஞர்கள் கடந்த மூன்றுண்டு காலமாக ஆலயத்தில் தங்கி அழகிய தோற்றத்தினையுடைய இராசகோபுரத்தை நிர்மாணித்துள்ளனர். ஏறக்குறைய ஒன்பது லட்சம் ரூபா செலவில் இது பூரணம் பெற்றுள்ளது.

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.'

## துர்க்கையை

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தித்து வணங்குவதுடன், இத்திருக்கோயில் சிறப்புற அமையவும், மகாகும்பாபிஷேக விழா நன்கினிது நடைபெறவும், பெருமுயற்சிகள் மேற்கொண்டு உழைத்துத் தொண்டாற்றிய மேற்படி தேவஸ்தான நிர்வாகசபையின் தலைவர் திருமதி 'துர்க்காதுரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், திரு. நம. சிவப்பிரகாசம், திரு. த பொன்னம்பலம் ஆகிய உப தலைவர்கள், திரு. க சிவவாகீசர், திரு. க தணிகாசலம் ஆகிய இணைக்காரியதரிசிகள், திரு. க. கணேசரத்தினம், திரு. ஐ. சண்முகநாதன் என்னும் தனாதிகாரிகள் முதலிய பெருமக்கள் பலருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும் அன்புமிக்க வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மகா கும்பாபிஷேக விழா சிறப்புற நிகழ்வதற்குப் பொறுப்பேற்றுச் சிறப்பிக்கும் பிரதான சிவாசாரியர்கள், உதவிச் சிவாசாரியர்கள். சாதகாசிரியர்கள் இராஜகோபுரம் எழிலுறஅமையச் சிறந்தமுறையில் பணிபுரிந்த கௌரவ ஸ்தபதி தமிழ்நாடு வளவனூர் திரு. எஸ். தேவலிங்கம் முதலிய எல்லோருக்கும், என்னுடைய அன்பு வணக்கமும் பாராட்டுதலும் உரியனவாகும்.

அருள்மிகு துர்க்காதேவியம்மையின் திருவருள் அனைவருக்கும் அனைத்து நன்மைகளும் அருள் புரிந்து நலம்பல விளைவிப்பதாக!

## தமிழ்க்காங்கிரஸ்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வாக்கி வளர்த்தார். ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள மக்களின் நலனுக்காக உழைத்த கட்சி. அதில் தமிழர் அங்கம் வகிப்பது தமிழ் இனத்தைக் காட்டிக்கொடுப்பதாகும்; தமிழர் நலனுக்காக உழைக்கும் இயக்கத்தினைக் காட்டிக்கொடுப்பதாகும் என்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த மகாதேவா போன்றவர்களைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர்த்துவந்தது; இன்னும் எதிர்த்துவருகின்றது.

நிலையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதன் பொருட்டு தமிழ்க்காங்கிரசின் ஆதரவை அமரர் டி. எஸ். சேனநாயகா கோரினர். தமிழினத்தின் தனித்தன்மையைக் காத்து ஒத்துழைப்புக்கு ஒத்துழைப்பு என்ற அடிப்படையில்தான் கூட்டு அரசாங்கம் ஒன்றில் யு. என். பியும் காங்கிரசும் அங்கம் வகித்தன. அமரர் மகாதேவாவின் செயல் இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்து அதன் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தார். அமரர் பொன்னம்பலம் மந்திரியானதால்தான் தமிழ்ப்பகுதி பொருளாதார ரீதியில் முன்னேறக்கூடியதாக இருந்தது. அவரது முயற்சியினால் தமிழ்ப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட பெருந்தொழிற்சாலைகள் பின்னர் எக்காலத்திலாவது தமிழ்ப் பிரதேசங்களில் எந்த அரசாங்கத்தினாலும் நிறுவப்படவில்லை. கடற்றொழில் அபிவிருத்தியடைவதற்கு அவர் ஆற்றிய சேவையினை எவரும் மறந்துவிடமுடியாது. தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்று வரைக்கும் அமரர் பொன்னம்பலம் போல் வேறு எவரும் சிறப்பான பணியாற்றியதில்லை.

1965-ம் ஆண்டு டட்லி சேனநாயகாவின் அமைச்சரவையில் தமிழரசுக் கட்சியினர் அங்கம் வகித்தமையும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. இராசதுரை இன்று யு என். பி. அமைச்சரவையில் அங்கம் வகிப்பதையும், இன்று கூட்டணித் தலைவர்களுள் ஒருவராக மன்னார் மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட திரு தொண்டமான் அமைச்சராக இருப்பதையும், கூட்டணியைச் சேர்ந்த அமரர் கனகரத்தினம் மாவட்ட அமைச்சராக இருந்தமைபற்றியும் தாங்கள் குறிப்பிடாமல் விட்டது ஏன் என்று தெரியவில்லை.

"தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி இரண்டாகவும், ஒன்றாக இணைந்த கூட்டணியும்" என்று தாங்கள் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும், கூட்டணி என்ற பெயரில் அன்றும் இன்றும் இருப்பது ஒரு தனிக்கட்சியாகும். தமிழரசுக்கட்சி என்ற பெயரில் இயங்கிவந்தவர்களே கூட்டணியினர். அக்கட்சியின் மறுவடிவமே கூட்டணி. இதில் தமிழ்க்காங்கிரசோ அல்லது வேறு கட்சிகளோ இன்று இணைந்திருக்கவில்லை. பொது நோக்கத்தோடு வல்வையில் பல கட்சிப் பிரமுகர்கள் ஒன்று பட்டு உருவாக்கிய பொது அமைப்பு, தமிழரசுக் கட்சியினர் ஏனைய கட்சியினரை அழித்தொழிக்க முயன்றமையால் சிதைக்கப்பட்டுவிட்டது.

ஜி. ஜி. பொன்னம்பலம்

(பொதுச் செயலாளர்)

அ. இ. தமிழ்க்காங்கிரஸ்

குறிப்பு:-1947 ல் உதயமான ஐ. தே. கட்சிக்கு அன்றே தமிழ் மக்களின் எதிர்ப்பிருந்தது. இன்று 1981-ல் அவ்வெதிர்ப்பு எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்பதை விளக்கவே தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணியென்ற கட்சிகளைக் குறிப்பிட்டிருந்தோம். வேறெதுவும் தலையங்கத்தில் இடம் பெற அவசியமிருக்கவில்லை

(ஆ......ர்)

## யூ. என். பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பகுதி யூ. என். பி. கட்சி ஆதரவாளர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன் கட்சியில் இயங்கிவந்தவர்களையே மாவட்ட சபைத்தேர்தலில் நிறுத்துமாறு மேலிடத்திற்கு வலியுறுத்தும்படி அவரிடம் தெரிவித்துள்ளனராம்.

யாழ்ப்பாண மாவட்டப் பட்டியலை பூர்த்தி செய்வதற்கு முன்னர் மேலும் சில அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பகிர்வின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று கிறிஸ்து வேண்டுகோள் விடுக்கிறார். இதுவே கிறிஸ்தவ ஆலயங்களில் திருப்பலி எனும் பெயரில் கல்வாரிப் பலியில் புதுப்பித்தல் சடங்காக நினைவுகூரப்படுகிறது.

கிறீஸ்து பாடுபடுவதற்கு முன் விடுத்த இறுதிவேண்டுகோள் "நான் உங்களை அன்பு செய்ததுபோல் நீங்கள் ஒருவரை ஒருவர் அன்புசெய்யுங்கள்" என்பதே இவ் அன்பில் வளர்வதற்கு உறுதுணையாக கிறீஸ்து தந்தவையே அவரது போதனைகளும் தேவதிரவிய அனுமானங்களும்.

எனவே அன்பு வாழ்வின் அடிப்படையான பகிர்ந்து வாழ்தலின் எல்லையே கிறிஸ்துவின் சிலுவை மரணம். கீழ்ப்படியாமையால் மானிடர்கள் இழந்த இறைத்தொடர்பை கடைசிவரை கீழ்ப்படிந்ததின் மூலம் கிறீஸ்து மீளவும் ஏற்படுத்தினர். அதேபோல் ஏவாள் என்னும் பெண்ணால் துண்டிக்கப்பட்ட மானிட இறைவன் தொடர்பை மீளவும் மரியாள் எனும் பெண் தனது கண்ணீரால் ஏற்படுத்துகிறுள் எனவேதான் சிலுவை மரணம் மரணமாகக் கணிக்கப்படாது மரணத்தின்மேல் வெற்றியாகக் கருதப்படுகிறது. மானிடர்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்று அழிக்க நினைத்தார்கள் கிறிஸ்துவோ அதே சிலுவையால் மானிடர்களை வென்று உலகை உய்விக்கிறார்.

## தீப பூசை

(கொக்குவில்)

கொக்குவில் கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை இரண்டாவது தீப பூசை நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபகவதி பத்மநாதன்

திருமதி சத்தியபகவதி பத்மநாதன் காலமாகிவிட்டார். அன்னார் புலோலி டாக்டர் பி. ஸ்ரீ பத்மநாதனின் அன்பு மனைவியும், ஜமுனா, காஞ்சனா, கல்பனா ஆகியோரின் அன்புத்தாயாரும், திருவாளர்கள் கே. கணேசலிங்கம் (நிர்வாக இயக்குநர் ஸ்ரீலங்கா புகையிலைக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்). டபிளியூ. கிருஷ்ணதாசன் (பொறியியலாளர் நைஜீரியா) ஆகியோரின் மாமியாரும், கப்டன் பத்மதேவன் (சிங்கப்பூர்) அவர்களின் அருமைச் சகோதரியும், பி. நவரத்தினராசா கியூ ஸி, பி. செல்வரட்ணம் (இளைப்பாறிய உணவு ஆணையாளர்) ஆகியோரின் மைத்துனியும், செல்விகள் மேனகா, கார்த்திகா, காண்டீபன், செந்தூரன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 18-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது புலோலி இல்லத்திலிருந்து பருத்தித்துறை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்

8897

மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.

MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு * உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்

* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்

சுற்றுலாக்கள் * பாஸ்போர்ட்

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்! உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.



மங்களகரமான திறப்பு விழா

வட இலங்கை கைத்தொழில் ஒன்றியம்

NORTH CEYLON CHAMBER OF INDUSTRIES

எங்கள் அலுவலகத்தை

இல. 15, 1-ம் மாடி, மணியம் கட்டிடம்,

சிறும்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில்

திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன்

(உதவிப் பொதுமுகாமையாளர் இலங்கை வங்கி)

அவர்கள்

18 04-81 சனிக்கிழமை மாலை 4·00 மணிக்குத்

திறந்துவைப்பார்கள்

சிறப்பு விருந்தினராக மாவட்ட மந்திரியும்

அரசாங்க அதிபரும் கலந்துகொள் வார்கள்

அனைவரையும் சமுகமளித்துச் சிறப்பிக்குமாறு

அழைக்கிறோம்

வட இலங்கை கைத்தொழில் ஒன்றிய

தலைவரும் இயக்குநர் சபையும் (8889)




இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்பிரல் 17 ... அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QD 6848/78 The Eelanaadu P. B. No. 9, Telegram "Eelanaadu" Phone: 089 ; 8126